



விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ் ஆர் ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் ரெகுராமன் இருந்தனர்.

# ஒரு டிரில்லியன் டாலர் வளர்ச்சிக்கான உத்திகள்!

## எடப்பாடி பழனிசாமிக்கு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

**சென்னை, பிப். 17 - "முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையைக் கொஞ்சமாவது கவனித்திருந்தால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகள் என்னென்ன என்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கும்" என்று சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்துள்ளார்.**



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்த பிறகு வெளியே செய்தியாளர்களிடம் பேட்டி அளித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அவர்கள். விவாதத்தில் காற்றோடு கத்திச்சண்டை போட்டவருக்குக் கைத்தட்டல்கள் கிடைக்குமா? என எண்ணி வெளியே சென்று பேசியிருக்கிறார்.

"திமுக ஆட்சியில் நிறைய குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை அறிக்கைகள் அளித்ததா? அந்த குழுக்களைப் பற்றிய வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்" எனப் பேசியிருக்கிறார். அந்தக் குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் அரசின் செயல்பாட்டை, நிதிநிலையை மேம்படுத்த அமைக்கப்பட்டவை. அவை நிர்வாகம் தொடர்பானவை. அதனைப் பொதுப் பார்வைக்கு வைக்கவேண்டியதில்லை என்பது முதலமைச்சராக இருந்தவருக்குத் தெரியாதா? நீட் தேர்வு குறித்த ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் போன்ற குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

### முதலமைச்சராக இருந்தவருக்குத் தெரியாதா?

"சென்னையைப் பாதித்த மிக்ஜாம் புயல், தென் மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் பாதிப்புகளுக்குச் செலவழித்த தொகை விவரங்களை தரவில்லை" எனவும் சொல்லியிருக்கிறார். இந்தப் பாதிப்புகள் கடந்த டிசம்பரில் ஏற்பட்டவை. ஒரு மாதத்திற்குள்ளாகவே செலவு விவரத்தை எப்படித் தர முடியும்? பாதிப்படைந்த சாலைகள் உட்பட பல பணிகள் தொடர் செலவினமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, செலவு எவ்வளவு? என்று கேட்கிறாரே முதலமைச்சராக இருந்த ஒருவர்.

"ஒரு டிரிலியன் டாலர் பொருளாதார வளர்ச்சி என்றார்கள். அதற்காக என்ன உத்திகள் கடைப்பிடிக்கப்படுகின்றன எனச் சொல்லவில்லை'' எனப் புலம்பியிருக்கிறார். "தமிழ்நாட்டை 2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை வைத்துச் செயல்படுகிறோம்" என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த இலக்கை எட்டத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையைக் கொஞ்சமாவது கவனித்திருந்தால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகள் என்னென்ன? என்பது அவருக்குத் தெரிந்திருக்கும்.

- இந்தியாவின் பொருளாதார வளர்த்திற்கு 9% பங்கைத் தருகிறது தமிழ்நாடு.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தமிழ்நாடு இரண்டாவது இடம்.
- ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சி 8.19%.
- இந்தியாவின் பணவீக்கம் 6.65%. ஆனால், தமிழ்நாட்டின் பணவீக்கம் 5.97% ஆகக் குறைந்து விட்டது.
- தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு 3ஆவது இடத்துக்கு உயர்த்தப்பட்டது.

இப்படி பட்டியல் போட்டுச் சொல்லியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இவைதான் ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்லும் உத்திகள். இலக்கை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருப்பதற்கான சான்றுகள். இதனை எதிர்க்கட்சித் தலைவர் புத்தியில் ஏற்றிக் கொள்ளட்டும்.

### நாடாளுமன்றத்தை முடக்கிய லட்சணம் தெரியாதா?

''காவிரி பிரச்சினைக்கு உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்திச் சரியான தீர்ப்பைப் பெற்றோம். அதை நடைமுறைப்படுத்த மத்திய அரசு காலதாமதம் செய்த போது அதிமுகவின் 37 எம்.பிக்கள் 22 நாட்கள் நாடாளுமன்றத்தையே முடக்கினார்கள். திமுக கூட்டணிக்கு 38 எம்.பிகள் இருக்கிறார்களே. எங்களைப் போல திமுக போராடி மத்திய அரசிடம் இருந்து நிதியைப் பெற்றிருக்க முடியும்" என்று சொல்லியிருக்கிறார். பழைய பேப்பரை எல்லாம் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள் பழனிசாமி அவர்களே. காவிரிக்காக நாடாளுமன்றத்தை முடக்கிய உங்கள் லட்சணம் என்ன? என்று தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லும் அந்த சம்பவம் 2018இல் எதற்காக நடந்தது? ஆந்திராவிற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்காததைக் கண்டித்து தெலுங்கு தேசம், ஒய்எஸ் ஆர். காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். அதனை நிறைவேற்ற விடாமல் தடுப்பதற்காக அதிமுக எம்.பிகள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்திப் பல நாட்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தை முடக்கினார்கள். "அதிமுகவுக்கும் பாஜகவுக்கும் மேட்ச் பிக்ஸிங் உள்ளது" என அன்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவே குற்றம்சாட்டியதை எல்லாம் மறந்துவிட்டீர்களா?

மோடி அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிடக் கூடாது என்கிற பாஜகவின் அஜண்டாவைதான் அன்றைக்கு அதிமுக செயல்படுத்தியது. உண்மையிலேயே காவிரிக்காகத்தான் அன்றைக்கு நாடாளுமன்றத்தை அதிமுக முடக்கியது என வைத்துக் கொண்டால், ''காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் விஷயத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்போம்" எனச் சொன்ன கே.சி.பழனிசாமியை மின்னல் வேகத்தில் கட்சியை விட்டு ஏன் நீக்கினீர்கள்? அன்றைக்கு கே.சி.பழனிசாமி பா.ஜ.க.வுக்கு எதிராகப் பேசிவிட்டார் என்றதும் உடனே எஜமான விசுவாசம் வெளிப்பட்டது. "காவிரிக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அதிமுக ஆதரிக்க வேண்டும்" என அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களிடம் கோரிக்கை வைத்தபோது, "ஆந்திரா பிரச்சினை வேறு. நமது கோரிக்கை வேறு" என பாஜகவிற்கு ஆதரவாகத் தானே பதில் சொன்னீர்கள்.

### அ.தி.மு.க. எம்.பி.க்களை அவமானப்படுத்திய பிரதமர்!

2014 செப்டம்பரில் சொத்துக் குவிப்பு வழக்கில் முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையை நீதிபதி குன்ஹா அவர்கள் விதித்தபோது. 'காவிரியை வச்சக்கோங்க. அம்மாவைத் தா' என போஸ்டர் ஒட்டியவர்கள் தானே அதிமுகவினர். காவிரிக்காக அ.தி.மு.க போராடியது எம்.ஜி.ஆர். ஜெயலலிதா காலத்தோடு போய்விட்டது. 2016இல் ஜெயலலிதா அப்பல்லோவில் சிகிச்சை பெற்ற நேரத்தில், 'காவிரிமேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும்' என வலியுறுத்தி அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் பிரதமர் மோடி அவர்களைச் சந்திக்க அவரது அலுவலகத்துக்குப் போனபோது. தடுத்து நிறுத்தப்பட்டு. திருப்பி அனுப்பப்பட்ட வரலாற்றை எல்லாம் மறந்து விட்டீர்களா?

"தேர்தல் அறிக்கையில் சொன்ன அறிவிப்புகளில் 10% மட்டுமே நிறை வேற்றப்பட்டிருக்கிறது. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் அறிவிப்புகளை தேர்தல் அறிக்கையில் சொல்லி மக்களை ஏமாற்றியிருக்கிறீர்கள்" எனச் சொல்லியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். சட்டமன்றத் தேர்தலின் போது மக்களுக்கு அளித்த 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளை நிறைவேற்றிய விவரத்தை 2022 மார்ச்சில் சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். அதன்பிறகும் பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆட்சிக்கு வந்த உடனேயே 505 வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட வேண்டும் என யாராவது கேட்பார்களா? அது சாத்தியமா? ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான் வாக்குறுதிகள் அனைத்தும் நிறை வேற்றப்படும். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி இருக்கிறது. படிப்படியாக மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு வாக்குறுதிகளை நிறை வேற்றும். 'அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் இலவச செல்போன், இலவச செட்டாப் பாக்ஸ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் நாளொன்று 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட அம்மா குடிநீர், அம்பேத்கர் அறக்கட்டளை என அதிமுக தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளை எல்லாம் நீங்கள் நிறைவேற்றி விட்டீர்களா?

ஊரக வேலைவாய்ப்பு 100 நாளில் இருந்து 150 நாட்களாக உயர்த்துதல், சேது சமுத்திரத் திட்டம், நீட் தேர்வு ரத்து போன்ற வாக்குறுதிகள் எல்லாம் என்னாச்சு என கேள்வி எழுப்பியிருக்கிறார். இவையெல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டியில் உள்ளவை. நிதிப் பகிர்வு முதல் திட்டங்கள் வரை ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. ஒன்றியத்தில் மோடி ஆட்சி மாறி இந்தியா கூட்டணி அமைந்தால்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு கிடைக்கும். அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




மதுரை மாநகராட்சி 58வது வார்டுக்கு உட்பட்ட கோலி பேமிலி (திருக்குடும்ப பெண்கள்) மேல்நிலைப் பள்ளியின். மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை மாமன்ற குழுத்தலைவர், கவுன்சிலர் மா.ஜெயராம் வழங்கி சிறப்புரையாற்றினார்.

8500 பள்ளிக்கூடங்கள் சீர்படுத்த தேர்வு:

# ரூ.190 கோடி மதிப்பீட்டில் பழுதடைந்த கட்டிடங்களைப் புதுப்பிக்க நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் இ.பெரியசாமி தகவல்!

**சென்னை, பிப். 17- சட்டப்பேரவையில் பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் ஜி.கே.மணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளியில் உள்ள கட்டிடங்கள் சீர்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுப்பிய போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி 8500 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் 2300 பள்ளிகள் முடிக்கப்பட்டுள்ளன என்றும், இப்பணிகளுக்காக முதல்வர் அவர்கள் ரூ.190 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.**



இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜி.கே. மணி:** தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என பல கட்டடங்கள் இடிந்த நிலையிலும், வகுப்பறைகள் இல்லாத இடங்களில் மரத்தடியில் மாணவர்கள் படிக்கின்ற சூழல் இருப்பதால், அதை பட்டியலிட்டு நாங்கள் கல்வித் துறைக்கு கொடுத்து இருக்கிறோம். ஒன்றிரண்டு என்று குறிப்பிட்டு சொல்வதற்கு இல்லை. நிறைய கட்டடங்கள் பழுதடைந்த காரணத்தால் பட்டியலை ஏற்றுக் கொண்டு வகுப்பறைகள் கட்டித்தரவேண்டும். அதிலும் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் அதிகம் படிக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு கழிப்பறைகள் இல்லை. அதையெல்லாம் பட்டியலிட்டு, கழிப்பறைக் கட்டுவதற்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் இ. பெரியசாமி:** உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் மிக விரிவாக சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் இருப்பதையெல்லாம், அவைகள் மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றுதான், அவைகள் முழுமையாக கண்டறிந்து அந்தக் கட்டடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. பழுது நீக்கினால் அவைகள் சரியாக இருக்கும் என்ற கட்டடங்களுக்காக ஏறத்தாழ 8500 பள்ளிக்கூடங்களை தேர்வு செய்து இருக்கிறோம். அதற்காக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே அவற்றிற்கு 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். அனைத்துப் பணிகளும் ஏறத்தாழ 2300 பணிகள் முடிக்கப் பட்டு, அதில் ஏறத்தாழ 100 பள்ளிகள் தான் பாக்கி இருக்கிறது. இப்போது நம்முடைய உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் நிறைய பள்ளிகளின் பட்டியலில் இருக்கின்றன என்று சொல்கிறார். நிச்சயமாக நீங்கள் அதை கொடுக்கலாம். அதை மீண்டும் நான் ஆய்வு செய்ய சொல்கிறேன். அப்படி ஆய்வு செய்கின்ற போது, எந்தெந்தப் பள்ளிகள் புதியதாக கட்டித்தர வேண்டுமோ அவைகளை கட்டித்தருவதற்கும், பழுதடைந்ததை பள்ளிகளை நாங்கள் கணக்கெடுத்து விட்டோம். அதில் அவர்கள் கணக்கெடுத்ததில், ஆரம்ப பள்ளி, நடுநிலைப் பள்ளி மொத்தம் சென்ற ஆண்டு 8500 பள்ளிகள் என்று கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். அப்பள்ளிகளுக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறதோ, அவ்வளவு நிதியையும் முதல்வர் அவர்கள் 190 கோடி ரூபாய் ஒதுக்கி கொடுத்தார்கள். கொடுத்து அவைகள் அத்தனையும் முடிக்கப்பட்டிருக்கின்றன. Comprehensive School Infrastructure Development Schemeல் fund என்று கொடுத்து இருக்கிறார்கள். இதுபோக இந்த ஆண்டு நீங்கள் பெண்ணாகரம் தொகுதியில் குறிப்பிட்டு சொல்கிறீர்கள். எங்கள் துறையினுடைய இயக்குநர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார். நான் அவர்களை அழைத்துப்பேசி, அங்கு சென்று ஆய்வு செய்ய நான் சொல்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# இந்தியாவின் ஒற்றுமையை உறுதி செய்யும்! "இந்தியா கூட்டணி"

**இ**ந்திய ஒன்றியத்தை இந்துக்களுக்கான "இந்து ராஷ்டிரமாக" உருவாக்குகின்ற லட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ராஷ்டிரிய சுயம் சேவக் சங் (RSS) - என்ற மதவாத அமைப்பின் அடிப்படை லட்சியத்திற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற ஆக்கபூர்வமான முயற்சியில் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஒன்றிய ஆட்சி உருவான நாள் தொடங்கி திட்டமிட்ட தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள்.


பிரதமர் நரேந்திரமோடி ஒன்றியத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் ஜம்மு காஷ்மீர் பகுதிக்கு இந்திய அரசியல் சட்டத்தின் 370வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டு வந்த சிறப்பு உரிமைகள் ரத்து செய்யப்பட்டு ஜம்மு காஷ்மீர் பகுதி ஒன்றிய ஆட்சிப் பிரதேசங்களாக மாற்றப்பட்டது. இந்த மிக முக்கியமான அரசியல் சட்டத்தினுடைய 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டு அந்த பகுதி ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளாக (Union territories) மாற்றப்பட்டது.

இது குறித்து அந்த மாநில மக்களின் ஒப்புதலைப் பெற்றிடவில்லை. ஒன்றிய அரசின் இத்தகைய திடீர் நடவடிக்கைக் காரணமாக அங்கு தொன்றுதொட்டு வாழ்ந்து கொண்டு வரும் இஸ்லாமிய மக்கள் பெரிதும் கவலையும், அச்சமும் அடைந்துள்ளனர். இதனை தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்திலுள்ள குடியுரிமை தொடர்பான சரத்துக்களில் (Article No 5, Indian costitution) மாற்றங்களை கொண்டு வந்தார்கள். ஒன்றிய அரசு இந்திய அரசியல் சட்டத்தில் மேற்கொண்டுள்ள இந்தத் திருத்தங்கள் இந்திய ஒன்றியத்தில் தொன்று தொட்டு வாழும் மதச்சிறுபான்மை மக்களிடம் மிகுந்த அச்சத்தை உருவாக்கியுள்ளது.

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தின் காரணமாக மதச்சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சட்ட விற்பன்னர்கள், பத்திரிகையாளர்கள் ஆகிய பிரிவினர், மதச்சிறுபான்மை மக்களின் அச்சத்திற்கான அடிப்படைக் காரணங்களை ஊடகங்கள் வாயிலாக விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள் என்பது நாட்டு மக்கள் அறிந்த செய்திகள்தான். ஒன்றிய அரசு இந்த எதிர்ப்புகளை முனைமுறியச்செய்யும் வகையில் இந்த சட்டத்தின் அமலாக்கம் குறித்து தொடர்ந்து அமைதி காட்டியது. ஆனால், திடீரென வரவிருக்கின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக குடியுரிமைத் திருத்தச் சட்டம் அமலுக்கு வருமென ஒன்றிய உள்த்துறை அமைச்சர் ஊடகங்கள் மூலமாக சமீபத்தில் உறுதிபடுத்தி உள்ளார்.

இதனைத்தொடர்ந்து மதச்சிறுபான்மையினருக்கு கலக்கத்தையும், அச்சத்தையும் வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக உருவாக்க வேண்டுமென்ற உள் நோக்கில் உத்தரக்காண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தி தங்களின் திட்டத்திற்கு வெள்ளோட்டம் பார்க்க ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி முனைந்துள்ளது என்பதை நம்மாலே அறிய முடிகிறது.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்



இதற்கிடையில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு, குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டை பண்ணுகின்ற நிகழ்ச்சியை எந்த அளவிற்கு நாட்டினுடைய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து, காஷ்மீர் வரையிலும் விளம்பரப்படுத்தினார் என்பதும், அந்த நிகழ்ச்சியின் முன்னேற்பாடாக இந்திய ஒன்றியப் பகுதியில் உள்ள புன்னியத் தலங்களுக்கெல்லாம் சென்றார் என்பதும், கம்பராமாயணத்தைப் பாராயணம் செய்யச்சொல்லி நீண்ட நேரம் கேட்டார், புனித நீராடினார் என்கின்ற பிரதம அமைச்சரின் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அச்சு ஊடகங்களிலும், மற்றைய மின் ஊடகங்களிலும் பெரிய அளவில் வியப்பான செய்திகளாக வெளியிடப்பட்டன.

சிறப்புப் பேருந்துகளும், இரயில்களும் அயோத்தியை நோக்கித் திருப்பி விடப்பட்டன. இவ்வளவு விளம்பரங்களோடும், ஆடம்பரங்களோடும் இந்திய நாட்டின் பிரதமரே முன்னின்று நடத்துகின்ற நிகழ்ச்சி, ஒரு ஆன்மீக நிகழ்ச்சி என்றுமட்டும்தான் என மதிப்பீடுசெய்யவியலாது. நாடாளுமன்றத்தினுடைய தேர்தல் - 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வரவிருக்கிறது,

ஆன்மீகத்தில் அக்கறையுள்ள பழமையான மடாலயங்களைச் சார்ந்த சங்கராச்சாரியார்கள், அயோத்தி ராமர் கோயில் முழுமையாக கட்டி முடிக்கப்படாத நிலையில், அயோத்தி ராமர் கோயிலைத் திறந்து வைத்ததும், குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டைப் பண்ணுவதும் பொருத்தமான நடவடிக்கையாக இருக்காது என்ற கருத்தை தெரிவித்துள்ளார்கள். இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் நாட்டின் பிரதம அமைச்சரே முன்னின்று அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதும், குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டை பண்ணுவதும் முற்றிலும் அரசியல் கலப்பில்லாத புனிதமான ஆன்மீக நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நவடிக்கைகள் என்று எடுத்துக் கொள்ள இயலுமா? என்பது தான் இந்திய நாட்டு மக்களின் உள்ளத்தில் எழுந்திருக்கும் பூதாகரமான கேள்வியாகும்?

அதுமட்டுமல்ல இந்த நிகழ்ச்சியினை தொடர்ந்து நாட்டு மக்களின் ஐயப்பாட்டை வலுப்படுத்தி உறுதி செய்யும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் நாடாளுமன்ற உரையும் உறுதி செய்கிறது. ஆம்! தன்னுடைய நாடாளுமன்ற உரையில், தங்களின் தேசிய ஜனநாயக - அரசியல் கூட்டணிக்கு(NDA) 400 இடங்கள் கிடைக்கும் என்று உறுதிப்பட தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல காங்கிரஸ் கட்சியையும், "இந்தியா" கூட்டணியையும் ஏளனமாக விமர்சிக்கிறார்.

பிரதமர் மோடி, தன்னுடைய நாடாளுமன்ற உரையில், மிகப்பெரிய முடிவினை, 2024ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் எடுக்கப்படும் என்றும், அந்த முடிவுகள் 1000 ஆண்டுகாலத்திற்கு பயனுள்ளதாக இருக்குமெனக் கூறுகிறார், அப்படியென்ன அதிசயத்திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதற்கான விளக்கத்தை அவர் தெரிவிக்கவில்லை, இத்தகைய கற்பனைக் கட்டுக்கதைகள் மூலம் மக்களை, நம்பவைக்க முடியுமென நம்புகிறார். ஆனால் மக்கள் கணினியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பிரதமர்மோடி அவர்கள் மறந்துவிட்டு உரையாற்றியுள்ளார்,

எதையும் ஆய்ந்தறிந்து உண்மைகளை கண்டறியும் ஆற்றல் பெற்ற அறிவுசார் சமூகம், நிச்சயமாக பிரதமரின் கற்பனை உரையினை கணக்கில் எடுத்துகொள்ளமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. மேலும் நிதி ஒதுக்கீடு நடைமுறையிலும் எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களுக்கு முறையான ஒதுக்கீடும் இல்லை, இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு அந்த மாநிலங்கள் எதிர்க்கட்சிகளின் ஆட்சி நடைபெறுகிறது என்பதால், சிறப்பு நிதியினை ஒதுக்குவதில்லை.

இந்த ஒருதலைப் பட்சமான நடைமுறைகளை விமர்சித்து தென் மாநிலங்களிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சனம் செய்தால் பிரதமஅமைச்சரும், நிதிஅமைச்சரும் எதிர்க்கட்சித்தலைவர்கள் வடக்கு, தெற்கு என்ற பிரிவினை வாதம் பேசுவதாக குற்றம் சாட்டுகின்றார்கள் . ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிலுள்ள பாரதிய ஜனதாக் கட்சி சார்ந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், ராஷ்டிர சுயம் சேவக் சங்(RSS) என்ற மதவாத அமைப்போடு இணைந்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் மூலம் இந்துக்களுக்கான "இந்துராஷ்டிரமாக" இந்தியாவை உருவாக்கிட திட்டமிட்டுள்ளார்கள் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

இவர்களின் இந்த திட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு விடப்பட்ட சவால்! அதுமட்டுமல்ல; இந்திய ஒன்றியத்தின் நிலப்பரப்பில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் மதச்சிறுபான்மை மக்களுக்கான எச்சரிக்கையும் ஆகும். நாட்டின் விடுதலைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தேசிய தலைவர்கள் கட்டமைத்த இந்திய நாட்டின் பன்முகத்தன்மைக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும், வேற்றுமையில் ஒற்றுமை, என்ற கோட்பாட்டிற்கும் வைக்கப்பட்ட வெடிகுண்டாகவே செயல்பட்டு நாட்டின் ஒற்றுமையை சிதறடிக்கும் .

இந்த உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் விழிப்புணர்வை வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மக்கள் பெற்றிட வேண்டும், மதவாத சக்திகளின் இந்த நாசகாரச் சிந்தனைகளை இந்த மண்ணை விட்டு விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என்பதே இந்திய நாட்டு மக்களின் சிந்தனையும் செயலாகவும் இருந்திட வேண்டும்.

வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் என்பது, இந்திய நாட்டின் அடையாளங்களை முற்றிலும் மாற்றிட நினைக்கும் மதவாதக் கூட்டத்திற்கும், தேசியத்தலைவர்களும், இந்திய அரசியல் சட்டமும் உருவாக்கித்தந்திருக்கின்ற நாட்டின் நிரந்தர ஒற்றுமைக்கான வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்கும் மதச்சார்பற்ற கோட்பாட்டிற்கும், சமூக நீதிக்கோட்பாட்டிற்கும் நடைபெறவுள்ள போர்க்களமாகும். எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தல் போர்க்களத்தில், மதவாத சக்திகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யவேண்டிய தலையாய கடமை இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும், உண்டு என்பதை நினைவுப்படுத்துவதோடு, இந்திய ஒற்றுமையின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு வாக்காளரும் இந்தியக் கூட்டணியை ஆதரிக்க வேண்டுமென்ற சபதமெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது காலத்தின் கட்டாயம் வரலாற்றின் நிர்ப்பந்தமும் ஆகும்.